யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

**Field Work Centre**

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015
# Term Examination, November - 2015

| தரம் :- 13 (2016) | இந்துநாகரிகம் - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ **பகுதி I இல் இரண்டு வினாக்களையும் பகுதி II இல் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி - I

01) இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் வேதங்களின் முக்கியத்துவத்தினை மேல்வருவன தொடர்பாகச் சுருக்கமாக விளக்குக.
(அ) சமயமரபு (ஆ) தத்துவமரபு (இ) சமுதாயம் (7 + 6 + 7 = 20 புள்ளிகள்)

02) தமிழகத்தில் சைவ பக்தி இயக்கம் வளம் பெற்றவாற்றை மேல்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராய்க.
(அ) பக்தி இயக்கம் தோற்றம் பெறக் காரணமாய் அமைந்த அரசியல் சமூக சூழ்நிலை
(ஆ) நாயன்மார்களின் பங்கும் பணியும்
(இ) ஆலயங்களும் பக்தி நெறியும் (4 + 10 + 6 = 20 புள்ளிகள்)

03) அறுவகைச் சமயங்களில் ஒன்றான கௌமாரம் பற்றி மேல்வரும் தலைப்புக்களில் விளக்கிக் கூறுக.
(அ) பிரமாண நூல்கள் (ஆ) தோற்றமும் வளர்ச்சியும்
(இ) வழிபாட்டுமுறை (ஈ) ஆலயங்களும் விரதங்களும்
(4 + 6 + 6 + 4 = 20 புள்ளிகள்)

## பகுதி - II

04) வட இந்திய பக்தி இயக்கத்தில் மேல்வருவோர் கொண்டிருந்த பங்கும் பணியும் பற்றி விபரிக்குக.
(அ) இராமானந்தர் (ஆ) கபீர்தாசர் (இ) மீராபாய் (6 + 7 + 7 = 20 புள்ளிகள்)

05) இந்து சமூகத்தில் நிலவிய குறைபாடுகளைக் களையுமுகமாகத் தோன்றிய நிறுவனங்களே நவீனகாலச் சமூக சீர்திருத்த இயக்கங்களாகும்.
(அ) நவீன சீர்திருத்த இயக்கங்கள் தோன்றியமைக்கான காரணங்கள்
(ஆ) ராஜாராம் மோகன்ராயும் பிரமசமாஜத்தின் பணிகளும் (8 + 12 = 20 புள்ளிகள்)

06) பொலநறுவைக் காலத்தில் ஈழத்தில் இந்துசமய வளர்ச்சி பற்றி ஆராய்க. (20 புள்ளிகள்)

07) “தமிழகத்தில் திராவிடக் கட்டிடக் கலை தோன்றி வளர்ச்சியடைந்த காலமாகப் பல்லவர் காலம் விளங்குகின்றது” இக்கூற்றை மதிப்பிடுக. (20 புள்ளிகள்)

08) மேல்வருவனவற்றுள் எவையேனும் நான்கினைப் பற்றிச் சுருக்கமான குறிப்புகள் எழுதுக.
(அ) சிந்துவெளிகால சில வழிபாடு (ஆ) ஆகமம்
(இ) அக்கினி (ஈ) திருமந்திரம்
(உ) திருக்கேதீச்சரம் (4 x 5 = 20 புள்ளிகள்)